செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

**பயிலரங்கம்-12** **நாள்:16.09.2022**

# மொழியியல் புலம்

**நடத்தும்**

## இந்தியப் பண்பாட்டு மொழியியலுக்குச் செவ்வியல் தமிழின் பங்களிப்பு

## Contribution of Classical Tamil to the Cultural Linguistic Tradition of India

**(12.10.2022 - 18.10.2022)**

## அறிவிப்பும் அழைப்பும்

இந்தியாவின் மொழிகளைப் பற்றி ஆராய்ந்த பிற்கால மொழியியல் அறிஞர்கள் இந்திய மொழிகளை இருவேறு மொழிக்குடும்பங்களாக இனங்கண்டனர். அவ்வாறு பிரித்தறியப்பட்ட மொழிக்குடும்பங்களை இந்தோ-ஆரிய மற்றும் திராவிட மொழிக்குடும்பங்கள் என அழைக்கத் தொடங்கினர். இவ்விரு மொழிக்குடும்பங்களும் பல்வேறு மொழிகளைத் தம்மகத்தேகொண்டு விளங்கி வருகின்றன எனத் தெரிவித்தனர். அதன் தொடர்ச்சியாக இந்திய மொழிக்குடும்பங்கள் குறித்துப் பல்வேறு ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. இருவேறு மொழிக்குடும்பங்களுள் உள்ள பண்பாடு, வரலாறு, சமூகப் பழக்க வழக்கங்கள், சமய நம்பிக்கைகள் உள்ளிட்ட நிலைகளில் பல்வேறு ஒற்றுமைக் கூறுகள் இருப்பது ஆய்வுகள் மூலம் நிறுவப்பட்டுள்ளது. இலக்கணச் சிறப்பும், செழுமையான இலக்கிய அமைப்பும் கொண்ட உயர்தனிச் செம்மொழிகளே பல்வேறு மொழிகளுக்கு மூலமொழிகளாக இருக்க முடியும். அந்த வகையில் தமிழ் மொழியானது தென்னிந்தியாவில் பேசப்படும் மொழிகளுக்கும் வெளியே பேசப்படும் பிராகூய் போன்ற இருபதுக்கும் மேற்பட்ட கிளைமொழிகளுக்கும் மூலமாக இருப்பதை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

இத்தகைய சிறப்பும் தொன்மையும் மிக்க தமிழ்மொழியில் பல்லாயிரமாண்டு பழமையான செவ்வியல் இலக்கியங்கள் தமிழ்ச் சமூகத்தைப் படம் பிடித்துகாட்டும் படைப்புகளாத் திகழ்கின்றன. தமிழ்ப் பண்பாடு, தமிழர்களின் கலை மற்றும் வாழ்வியல் முறைகளில் தமிழ்மொழி வேரூன்றியுள்ளது. தமிழ்ச்சமூகம் சார்ந்த வரலாறு, அரசியல்,

சமயம், தத்துவம் இயல், இசை, நாடகம், ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, விளையாட்டு, உணவு வகைகள், உடைகள், பொழுதுபோக்குக் கொண்டாட்டங்கள், சடங்குகள் ஆகியன செவ்வியல் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கூறுகள் இந்திய அளவில் பண்பாடு, மொழியியல் துறைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறு இந்தியப் பண்பாட்டுக்கும் மொழியியலுக்கும் செவ்வியல் தமிழ் இலக்கண இலக்கியம் அளித்துள்ள பங்களிப்பை மொழியியல் அடிப்படையில் ஆராய்தலை நோக்கமாகக் கொண்டு இப்பயிலரங்கம் நடைபெறவுள்ளது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மொழியியல் புலம் நடத்தும் இப்பயிலரங்கில் முனைவர் பட்ட ஆய்வு **மாணவ-மாணவியர்** கலந்துகொண்டு பயன்பெற அழைக்கப்படுகின்றனர்.

## பயிலரங்க விதிமுறைகளும், விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை: **25**
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **12.10.2022** முதல் **18.10.2022** முடிய ஏழு நாட்கள்
3. பயிலரங்கு நேரம்: காலை 10.00 – 1.00 & மாலை 2.00 – 5.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து **workshopling@cict.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/ அலைப்பேசி வழியாகத் தொடர்புகொள்ளக் கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்படுதல் வேண்டும்
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/ புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதுநாள் **06.10.2022**. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கபட்டவர்களுக்கு **07.10.2022** அன்று மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்

13. இப்பயிலரங்கில் பங்கேற்போர் **28** அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்கு தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்பட மாட்டது.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100


# மொழியியல் புலம்

## இந்தியப் பண்பாட்டு மொழியியலுக்குச் செவ்வியல் தமிழின் பங்களிப்பு

## Contribution of Classical Tamil to the Cultural Linguistic Tradition of India

பயிலரங்கம் – 12

**(12.10.2022 - 18.10.2022)**

**விண்ணப்பப் படிவம்**

<table>
<tr><td>1.</td><td>பெயர்<br>Name</td><td colspan="5">தமிழ்<br>English</td><td colspan="2" rowspan="3">நிழற்படம்|Photo</td></tr>
<tr><td>3.</td><td>பிறந்த நாள் / வயது| Age / Day of Birth</td><td colspan="5"></td></tr>
<tr><td>4.</td><td>பாலினம் | Gender</td><td colspan="5"></td></tr>
<tr><td>5.</td><td colspan="2">வகுப்பு | Class</td><td>பொது| General</td><td></td><td>இ.பி.வ. | OBC</td><td></td><td>பட்டியல் இனம் | SC. ST</td><td></td></tr>
<tr><td>6.</td><td colspan="2">கல்வித் தகுதி | Educational Qualification</td><td colspan="6"></td></tr>
<tr><td>7.</td><td colspan="2">ஆய்வியல் நிறைஞர்/ முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ ஆண்டு| M.Phil / Ph.D. in Science Date / Year of joining</td><td colspan="6"></td></tr>
<tr><td>8.</td><td colspan="2">ஆய்வியல் நிறைஞர்/ முனைவர் பட்டப் ஆய்வுத் தலைப்பு | M. Phil / Ph.D. Research title</td><td colspan="6"></td></tr>
<tr><td>9.</td><td colspan="2">பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொலைப்பேசி/ மின்னஞ்சல் | University / College / Address (Phone / Email)</td><td colspan="6"></td></tr>
<tr><td>10.</td><td colspan="2">இல்ல முகவரி (தொலைபேசி)<br>| Home address (Phone)</td><td colspan="6"></td></tr>
<tr><td>11.</td><td colspan="2">புலன எண் | WhatsApp number</td><td colspan="6"></td></tr>
<tr><td rowspan="2">12.</td><td colspan="2" rowspan="2">செம்மொழி நிறுவனம் இக்கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக | Did you attend the workshop conducted by the CICT this academic year? If yes, please give details</td><td colspan="6">ஆம் | Yes<br>இல்லை| No</td></tr>
<tr><td colspan="6"></td></tr>
</table>

நாள்:

இடம்: (கையொப்பம்)

நெறியாளர் /துறைத் தலைவர்/ முதல்வர்/ பதிவாளர்

உரிய முத்திரையுடன்